கரூர் ஊராட்சி ஒன்றியம், புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர்

அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி **S. லதா சுப்பிரமணி** தலைவர்

நக.எண் : 01 / 2023–24 நாள் :08.11.2023

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், புஞ்சை கடம்பன்குறிச்சி கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 301/11A2B ல் 2.35 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை (நிலை)எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 16.06.2003
2. புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண். 103/2023–24 நாள். 20.09.2023
3. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், கடித கோப்பு எண். 441 / 2022 /கமா நாள் 01.11.2022
4. மனுதாரர் திரு. V. பார்த்தசாரதி த/பெ. வேணுகோபால் என்பவரின் விண்ணப்ப நாள். 18.09.2023
5. வேலாயுதம்பாளையம் சார்பதிவகம் – புத்தகம் எண். BK-I –1423/2022

உத்தரவு–

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 301/11A2B ல் 2.35 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும், மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை 4–ல் காணும் விண்ணப்பத்தின்படி கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 2–ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண். 103/2023–24 நாள். 20.09.2023 ன் படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடித கோப்பு எண். 441 / 2022 /கமா நாள் 01.11.2022ந் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/மா.ந.ஊ.அ (கமா) எண். 202/2022 என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார், மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய மனைப்பிரிவு சாலை, பொது உபயோகம் 0.55% மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கான 0.53% இடம் ஆகியவற்றை பார்வை 5–ல் காணும் ஆவணம் மூலம் புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு மனைவிட கூராய்வு கட்டணம் ரூ.53000/– (பல்வகை ரசீது எண். 4230 நாள் 08.11.2023), மனைவிட நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.52875/– (பல்வகை ரசீது எண். 4231 நாள் 08.11.2023) மற்றும் மனைவிட அனுமதி கட்டணம் ரூ. 5000/– (பல்வகை ரசீது எண். 4232நாள் 08.11.2023) வசூலிக்கப்பட்டு ஊராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டது. இவற்றின் அடிப்படையிலும், கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையிலும், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் புஞ்சை கடம்பன்குறிச்சி கிராம சர்வே எண். 301/11A2B ல் 2.35 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

9-11-23

தலைவர்,
[illegible]
பு. கடம்பன்குறிச்சி ஊராட்சி
புஞ்சை கடம்பன்குறிச்சி ஊராட்சி

பெறுநர்

வேலாயுதம்பாளையம் சார்பதிவாளர்,
கரூர் மாவட்டம்.

நகல்.

1 உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை, கரூர் மாவட்டம், கரூர்.

2 திரு. V. பார்த்தசாரதி
த/பெ.வேணுகோபால்
K.P நகர், ஆத்தூர், கரூர் மாவட்டம்.